என்று இப்போது துறை பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் அவர்கள் பொறுப்பிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிற பெண்களினுடைய அமைப்புகள், குறிப்பாக ஐந்தாறு மாவட்டங்களில் அவ்வாறு பணியாற்றுகிறார்கள்; அவற்றிலே தர்மபுரி மாவட்டமும் ஒன்று; அந்த அமைப்புகளின் மூலமாக இப்படிப்பட்ட கடைகளை நாம் உருவாக்க முடியுமா என்பதையும் இந்த உணவுப் பொருள்களை வழங்குகிற பொறுப்பை அவர்களிடத்திலே ஒப்படைக்க முடியுமா என்பதையும் நம்முடைய சமூகநலத் துறையோடு கலந்து பேசி ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம். அப்படிப்பட்ட ஒரு முயற்சியை, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் மேற்கொள்ளலாம். நான் முன்னரே சொன்னதைப்போல, அந்தப் பகுதியிலே இருக்கிறவர்கள் யாராவது பொறுப்பேற்றுக் கொண்டு, அந்த 102 அட்டைகளுக்கான பொருள்களை, அந்தக் கடையிலேயிருந்து வாங்கிக் கொண்டுபோய், அங்கே வினியோகிக்க முன்வருவார்களேயானால், நாம் அதற்கான நடவடிக்கை எடுக்க இயலும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 443, திரு. உ. பலராமன், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. கே. பி. ராஜு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**443—**

### காலரா நோயை ஒழிப்பதற்குப் புதிய திட்டம்

**21652—*திரு. உ. பலராமன்:*

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் காலரா நோயை முழுமையாக ஒழிப்பதற்கு புதிய திட்டம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காலரா, குடிநீர் மற்றும் உணவு மூலம் பரவும் நோயாகும். அயல் நாடுகள் மற்றும் பிற மாநிலங்களிலுள்ள மக்கள், தங்களுடைய வியாபாரம் மற்றும் தொழில் நிமித்தமாக, பணி செய்தலின் பொருட்டு, வெளியிடங்களில் உணவு உண்ணும் நிலை, தவிர்க்க முடியாததாக உள்ளது. எனவே, பிற மாநிலங்களும் சேர்ந்து, ஒரே நேரத்தில் காலரா தடுப்பு முறைகளை மேற்கொண்டாலன்றி, அந்நோயை முழுமையான

*1995 ஏப்ரல் 26*]

அளிவில், தமிழகத்திலே ஒழிப்பது என்பது இயலாத காரியமாக இருக்கும். இருப்பினும், காலராவைத் தடுப்பதற்கு அனைத்துத் திறன்மிகு கட்டுபாடு முறைகள் மற்றும் தடுப்பு முறைகள், கண்காணிப்பு ஆகியவை, மிகச் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**திரு. கே. பி. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணவு மற்றும் குடிநீரினால் காலரா பரவுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பொதுவாக, ஈயினால்தான் காலரா பரவுவதாக ஒரு கருத்து நிலவுகிறது. ஆகவே, இந்தியா முழுமையிலும், ஒரே நேரத்தில் ஈக்களை ஒழிப்பதற்கு ஏதாவது வழி இருக்கிறதா? அப்படியில்லையென்றால், தமிழ்நாட்டிலாவது ஈக்களை ஒழித்தால், காலரா பரவுவதைத் தடுத்து விடலாம். தமிழ்நாட்டில் ஈக்களை ஒழிப்பதற்காவது திட்டம் வகுத்துச் செயல்படுத்த, அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது ஈக்களினால் மட்டுமே பரவுவதில்லை. நீங்கள்கூட அதைத் தொட்டுவிட்டு, இன்னொரு உணவைத் தொட்டால், அது பரவுவதற்கான வாய்ப்பிருக்கிறது. எனவே, உணவு கெட்டு விட்டாலோ, அல்லது சுத்தப்படுத்தப்படாத அல்லது நல்ல இடத்திலே இல்லாத குடிநீரைப் பயன்படுத்துவதன் மூலமாகவோ, இந்தக் காலரா நோய் பரவிவிடுகிறது. இதனைத் தடுப்பதற்காக அரசாங்கம் இப்போது அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருக்கிறது. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, உள்ளாட்சித் துறை மூலமாக அனைத்துக் குடிநீர் ஆதாரங்களும் குளோரினேட் செய்யப்படுகின்றன. அதேபோல், இந்த நோய் வருகிறது என்ற அறிகுறி ஏற்படுகிறபோது, உடனடியாக அதிகாரிகள் அந்த இடத்திற்குப் போய், அதனைத் தடுக்கின்ற நடவடிக்கைகளையும் எடுக்கிறார்கள். எனவே, இப்போது உள்ளாட்சித் துறையின் மூலமாக, முன்கூட்டியே அதைத் தடுப்பதற்கான அனைத்து எச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிங்கை கோவிந்தராசு.

**திரு. சிங்கை கோவிந்தராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழகத்திலே காலரா நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் எத்தனைப் பேர் இருக்கிறார்கள் ? அவர்களுக்கு இப்போது இதற்கென்று தனியாக மருத்துவர்களை நியமித்து, மருத்துவச் சிகிச்சை கொடுக்கப்படுகிறதா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

[*1995 ஏப்ரல் 26*

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு 876 பேர் இந்த நோயினால் பாதிக்கப்பட்டார்கள். இறப்பு ஒன்றும் இல்லை. இந்த மாதிரி நோய் வருகிறபோது அந்தந்தப் பகுதியிலே இருக்கின்ற மருத்துவமனைகளிலே உடனடியாக தனியாக அதற்கென்று ஒரு இடத்தை ஒதுக்கி அவர்களுக்கு சிகிச்சை கொடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அது மட்டுமல்லாமல், அந்தப் பகுதியிலேயும் மருத்துவர்கள் சென்று தேவையான நடவடிக்கைகளை எடுக்கிறார்கள். அதோடு, அந்தப் பகுதியிலே சுத்தம் செய்வது, குடிநீரைச் சுத்தப்படுத்திக் கொடுப்பது, இப்படிப்பட்ட அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படுகிறது. அதோடு சுகாதாரமாக இருப்பதற்கு என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும், பொதுமக்கள் என்னென்ன நடவடிக்கைகளைக் கையாளவேண்டும் என்ற அறிவுரையும் அவர்களுக்கு வழங்கப்படுகிறது. எனவே, அந்தந்த இடங்களிலே அந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதற்காக சென்னையிலே ஒரு மருத்துவமனை தனியாக இயங்கி வந்தாலும், மற்ற இடங்களிலே இருக்கிற மருத்துவமனைகளிலே தேவையான நேரத்திலே தேவையான படுக்கைகள் ஒதுக்கப்படுகிறது. இப்போது காலரா நோயைப்பற்றித்தான் நான் சொன்னேன். ஆனால், வயிற்றுப் போக்கால் பாதிக்கப்படக்கூடியவர்களும் இருக்கிறார்கள். எனவே, அவர்களுக்கும் சேர்த்து இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 444, திருமதி ப. சரஸ்வதி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**444--**

**மோகனூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக மாற்றுதல்.**

**33406*--**திருமதி ப. சரஸ்வதி :**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

சேலம் மாவட்டம், நாமக்கல் வட்டம், மோகனூர் அரசு மருத்துவமனை, ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றப்பட்டதை மீண்டும் அரசு மருத்துவமனையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.